**தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை பற்றிய கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்,

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தித் தொடர்பு | அமுல்படுத்தியிருக்காத பரிந்துரைகள் | இவ்வறிக்கையின் பந்தித் தொடர்பு |
|---|---|---|
| 1.6.2. (அ) | முன்னைய ஆண்டு நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி மீளாய்வாண்டின் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கிடையில் வித்தியாசமொன்று நிலவுகின்றமை. | 1.6.1. (அ)(i) |
| 1.6.2.(அ) (iv) | திணைக்களத்தின் பெயரில் உரிமையை சுவீகரித்துக் கொள்ளாத கணக்கீடு செய்யப்பட்டுள்ள காணி | 1.6.2.(அ)(viii) |
| 1.6.3 | கடன்படுனர் மீதி தொடர்பாக உறுதி செய்து கொள்ள சான்றுகள் சமர்பிக்கப்படாமை | 1.6.2. (அ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 9,812,358,938 ஆன போதும மீளாய்வாண்டு நிதிக்கூற்றுடன் | 2021 ஆண்டின் இறுதி மீதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆண்டின் ஆரம்ப மீதிகளுடன் வித்தியாசம் காண்பிக்கப்படுகின்றது. இந்த | நிதியல்லா சொத்துக்களின் மீளாய்வாண்டு ஆரம்ப மீதி |

| | | | |
|---|---|---|---|
| | சமர்பித்திருந்த ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) மற்றும் திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ 82 படிவ பிரகாரம் ஆரம்ப மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 9,866,493,587 மற்றும் ரூபா 10,036,552,452 ஆனதில் முறையே ரூபா 54,134,650 மற்றும் 224,193,514 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | வித்தியாசம் சிகாஸ் தொகுதியில் காணப்படும் பிரச்சினைக்குரிய நிலைமை என இனங்கண்டுள்ளதுடன், அதற்கான சீராக்கம் செய்ய அரச கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படுகிறது. சீராக்கிய பின்னர் உங்களுக்கு எதிர்காலத்தில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | முன்னைய ஆண்டின் இறுதி மீதிக்கு சமமாக வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கான சேர்ப்பனவு ரூபா 143,777,803 ஆன போதும், கணக்காய்விற்கு சமர்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ 82 படிவம் பிரகாரம் அது ரூபா 311,783,096 ஆனதில் ரூபா 168,005,293 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ஆரம்ப மீதிக்கு மேற்கொண்ட சேர்பனவுகளின் அட்டவைண கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) மற்றும் கணக்காய்விற்கு சமர்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ 82 படிவம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதியுடன் சீராக்கிய சேர்ப்பனவுகள் சமமாக வேண்டும். அவற்றிற்குரிய அட்டவைண கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள எஸ்ஏ – 82 படிவம் (ஏசீஏ – 6) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி 10,223,624,941 ஆன போதும், கணக்காய்விற்கு சமர்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ - 82 படிவம் பிரகாரம் அம் மீதி ரூபா 10,246,231,293 ஆனதில் இறுதி மீதிகளிற்கு இடையில் ரூபா 22,606,352 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள எஸ்ஏ – 82 படிவம் (ஏசீஏ – 6) மற்றும் கணக்காய்விற்கு சமர்பித்துள்ள எஸ்ஏ - 82 படிவத்தில் அடங்கியுள்ள நிதிசார் சொத்துக்களின் இறுதி மீதிகள் சமமாக வேண்டும். |
| (iv) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் |

|  |  |  |  |
|---|---|---|---|
|  | இறுதி மீதிகளிற்கிடையில் ரூபா 2,144,397 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. |  | நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிகள் சமமாக வேண்டும். |
| (v) | கணக்காய்விற்கு சமர்பித்துள்ள எஸ்ஏ - 82 படிவம் மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிகளிற்கிடையில் ரூபா 20,461,955 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | கணக்காய்விற்கு சமர்பித்துள்ள எஸ்ஏ - 82 படிவம் மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிகள் சமமாக வேண்டும். |
| (vi) | சிறைசாலைகள் திணைக்களத்திற்கு உரிமையை ஒப்படைத்துள்ள ரூபா 460,940,000 பெறுமதியான 36.34 ஏக்கர் ஆன காணி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் 36.34 ஆன காணிகளின் உரிமையை சுவீகரித்துக் கொண்ட பெறுமதியை மதிப்பிட்டுள்ள போதும், மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாததுடன், இதனை 2023 ஏப்ரல் 24 திகதி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இக் காணிகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vii) | திணைக்கள பெயரிற்கு உரிமையை சுவீகரித்துக் கொள்ளாத ரூபா 119,500,000 பெறுமதியான 44.4 ஏக்கர் ஆன காணி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திணைக்கள பெயரிற்கு உரிமையை சுவீகரித்துக் கொள்ளாத காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்துள்ளதுடன், அதனை கணக்குகளில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | திணைக்கள பெயரிற்கு உரிமையை சுவீகரித்துக் கொள்ளாத காணிகளை கணக்கீடு செய்ய முன்னர் உரிமையை சுவீகரித்துக் கொள்ள வேண்டும். |
| (viii) | 2022 ஆண்டில் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த நிதியல்லா சொத்துக்களை கணக்கீடு செய்வது தொடர்பாக வெலிகட, மெகஸின், கொழுப்பு சிறைசாலை, காலி மற்றும் பூஸ்ஸ ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையின் போது ரூபா 1,397,399 பெறுமதியான 30 விடயங்களிற்குரிய 69 உருப்படிகளின் அன்பளிப்பு சொத்துக்கள் சிகாஸ் நிகழ்சித் திட்டத்திற்கு உட்படுத்தி இருக்கவல்லை. | சிறைசாலைகள் நிறுவனங்களில் நுகர்வு பொருட்களை கணக்கீடு செய்ய அனைத்து சிறைசாலைகள் நிறுவனங்களின் சிறைச்சாலைகள் அத்தியட்ச்சகர்களை அறிவூட்டியுள்ளதுடன், 2023 ஆண்டு முதல் காலாண்டிற்கு காலாண்டு கணக்கீடு செய்யும் அறிக்கை தலைமையகத்திற்கு அழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திலிருந்து கிடைக்கும் அனைத்து நிதியல்லாத கொடைச் சொத்துக்கள் சிகாஸ் நிகழ்சித் திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

**(ஆ) பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் பின்னிணைப்பு (III) மற்றும் (IV) கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியினால் வெளியிடப்பபடும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணக்கஞ் செய்திருக்க வேண்டிய போதும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 1,823,707,456 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பெறுமதி திறைசேரி புத்தகங்கள் பிரகாரம் ரூபா 932,372,486 ஆனதில் ரூபா 891,334,970 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கடப்பாடுகள் ஏற்படுத்தும் பல பிரிவுகள் ஓர் நிறுவகத்தில் உள்ள போதும், அவர்கள் அனைவர்களுக்கும் சிகாஸ் தொகுதியிற்கு பிரவேசித்து பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளீடு செய்ய காணப்படும் பௌதீக ரீதியான பிரச்சினைக்குரிய நிலைமை மற்றும் சிகாஸ் வேலைத்திட்டத்தின் சில பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தீர்த்துள்ள போதும், சிகாஸ் வேலைத்திட்டத்தின் தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்களாக பல ஆண்டுகளாக காணப்படுவது இதற்கு காரணமாகும். | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடப்பாடகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி திறைசேரி புத்தகங்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிற்கு சமமாக வெண்டும். |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் தொழில்நுட்ப மற்றும் விவசாய தொழில்நுட்ப முற்பண கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 97,388,180 ஆன பெற வேண்டிய மீதியிலிருந்து ரூபா 25,990,192 ஆன மீதியை உறுதி செய்துகொள்ள தேவையான சான்றுகள். | 2015 ஆண்டிற்கு முன்னரான பட்டியல்கள் காணாமல் போயுள்ளதால் அப் பெறுமானங்கள் தொடர்பான சரியான புள்ளி விபரங்களை பெற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது. | கடன்படுனர் மொத்த மீதியும் உறுதி செய்து கொள்ள தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தினுள் உட்படுத்திய சிறைச்சாலை நலன்புரி நிதியத்தில் ரூபா 2,371,275 பெறுமதியான நிதியல்லா சொத்துக்கள் குறிப்பாக பௌதீக ரீதியாக இனங்கண்டு கணக்கு | மத்திய களஞ்சியத்திற்கு கிடைக்கும் அனைத்து பண்டங்களிற்காக, பண்டக இருப்பு பெறுவனவுக் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆண்டு முதல் உரிய காலாண்டிற்கு காலாண்டு | உரிய சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களில் அறிக்கையிட்டதாக உறுதி செய்ய தேவையான சான்றுகள். | கணக்கீடு செய்யும் அறிக்கையை தலைமையகத்திற்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பல நிறுவனங்களிடமிருந்து சுவீகரித்திருந்து 87 வாகனங்களிற்கு பதிவு சான்றிதழ்களை (CR) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொள்வது தொடர்பான தகவல்கள் | சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்காக தேவையான தகல்களை பெற்றுக் கொள்வதன் கடினம் காரணமாக பதிவு சான்றிதழ்களை திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | பதிவு சான்றிதழ்களை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நடாத்திச் செல்லப்படும் நலன்புரி சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களில் கடமையாற்ற திணைக்கள அலுவலர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் நீர் மற்றும் மின்சாரத்திற்காக செய்யப்படும் செலவினம் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகிறது. எனினும் இந்த நலன்புரி சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்லுவதற்காக கிடைக்க வேண்டிய வாடகை வருமானத்தை இனங்கண்டு அவ்வருமானத்தை நிதிப் பிரமாணம் 83 பிரகாரம் அரச வருமானத் தலைப்பு இலக்கம் 05 இன் வருமான குறியீட்டு இலக்கம் 20-02-01-01 இன் கீழ் குத்தகை வருமானமாக அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மாதிரி அடிப்படையில் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது 09 சிறைச்சாலை நிறுவனங்களின் 2022 ஆண்டின் முதல் 06 மாதங்களினுள் இதற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் 27 உத்தியோகத்தர்களிற்காக சம்பளம் மற்றும் ஊதியமாக ரூபா 7,528,306 தொகை சிறைச்சாலைகள் திணைக்களம் செலுத்தியிருந்தது. இதற்கு மேலதிகமாக 5,581 மனித மணித்தியால சிறை ஊதியம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் கைதிகளிற்கு | சிறைச்சாலை நிறுவனங்களில் பாதுகாப்பு நிலைமை காரணமாக வெளி அலுவலர்கள் சிற்றுண்டிச்சாலைகளில் கடமைக்கு ஈடுபடுத்த முடியாததால் அதற்காக சிறைச்சாலை அலுவலர்களை கடமையில் ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. சிறைச்சாலை அலுவலர்களின் நலன்புரியை முதன்மையாகக் கொண்டு இந்த சிற்றுண்டிச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுவதுடன், கிடைக்கும் வருமானம் மொத்த அலுவலர்களினதும் நலன்புரியை நோக்கக் கொண்டு விளையாட்டு மற்றும் நலன்புரி சங்கத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 83 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உணவுப் பண்டங்கள் மற்றும் சுகாதார பொருட்களை விற்பனை செய்வதனால் மாத்திரம் ரூபா 104,827,723 ஆன வருமானமொன்று ஈட்டப்பட்டிருந்தது.

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின 05 விடயங்களிற்காக பெற்றுக் கொண்டிருந்த ரூபா 111,875,000 ஆன மதிப்பீட்டு ஏற்பாடுகளிலிருந்து ரூபா 44,050,471 ஆன ஏற்பாடு எஞ்சியிருந்ததுடன் அந்த சேமிப்பு 21 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையான வீசசளவில் காணப்பட்டது. | கணக்காய்வினால் மேற்கொளள்ப்படும் அவதானிப்புடன் இணங்குவதுடன், உரிய செலவின விடயத்தின் கீழான சேமிப்பு தொடர்பாக பின்வரும் காரணங்களை காண்பிக்க முடியும்.<br>• எதிர்பார்த்த கடமைகளை நிரைவேற்றுதல் முடிவுறாதமை.<br>• 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.<br>• சந்தையில் பண்டங்களின் பற்றாக் குறையினால் வழங்கல்களை மேற்கொள்ள முடியாதமை.<br>• கட்டுநிதி வழங்கல் செய்யப்படாமை. | நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | ஒரு மூலதன செலவு விடயத்தில் மற்றும் 02 மீண்டெழும் செலவு விடயங்களிற்காக ஒதுக்கி இருந்த ஏற்பாடுகளிலிருந்து நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களிற்காக மாற்றியதன் பின்னரும் அச் செலவின விடயங்களில் தேறிய ஏற்பாட்டின் மீது மேலும் சேமிப்பு 18 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சளவில் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன், நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றியதன் பின்னரும் உரிய செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு சேமிப்பானதற்கு காரணமான விடயங்கள் பின்வரும்<br>• கட்டுநிதி திறைசேரியிடம் இருந்து கிடைக்காததன் காரணமாக எதிர்பார்த்த விதத்தில் செலவுகளை மேற்கொள்ள முடியாது போனமை.<br>• கடந்த ஆண்டினுள் கொவிட் தொற்று நிலைமை கனிசமான அளவு கட்டுப்படுத்தப்பட்டதனால் எதிர்பார்த்த வாறு ஏற்பாட்டை பயன்படுத்த தேவைப்படாமை.<br>• 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| (i) | மோடார் வாகன சட்டத்தின் 25(1) | - | செல்லுபடியான வருமான அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாமல் திறைச்சாலைகள் திணைக்களத்தின் 85 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை. | வாகனங்கள் 48 இற்காக வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டு வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| | நிதிப் பிரமாணம் 210 | 1,014,415 | வட்டத்தை பெற்றுக் கொள்ள முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த வட்டத்தை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு கால நேரத்துடன் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதும், 04 சிறைசாலை நிறுவனங்களில் 21 கணக்குகளிற்கு உரியதாக 2022 ஆண்டில் நீர் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது வட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு உரிய காலத்தினுள் கொடுப்பனவை செலுத்தாததால் வட்டத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | கட்டுநிதி விடுவிக்கப்படும் அளவின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய நேரிட்டதால் பட்டியல்களை தீர்க்கும் போது கனிசமான காலமொன்று செல்வதால், திறைசேரியை அறிவூட்டி இதற்காக முறைமையொன்றை தயாரித்துக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 210 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 502(ஆ) | - | நீண்ட காலமாக நிலவி வரும் பின்வரும் கிடைக்க வேண்டிய கடன் மீதிகளை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>• சிறைச்சாலையினால் அரச துறைக்கு மேற்கொண்ட விற்பனைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 97,836,732 மீதியில் 20 ஆண்டுகளை விடவும் பழைய ரூபா 1,643,588 மற்றும் 5 – 20 ஆண்டுகளிற்கு இடையிலான ரூபா 24,310,986 ஆன கிடைக்க வேண்டிய மீதிகளானது.<br><br>• சிறைச்சாலையினால் தனியார் துறைக்கு மேற்கொண்ட விற்பனைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 35,618 ஆன மீதியில் 20 ஆண்டுகளை விடவும் பழைய ரூபா 19,034 மற்றும் 10 – 20 ஆண்டுகளிற்கு இடையிலான ரூபா 16,584 ஆன கிடைக்க வேண்டிய மீதிகளானது. | இந் நிலுவை பட்டியல்களில் கூடுதலானவை 2015 ஆண்டிற்கு முன்னரானவை ஆகும். இப் பட்டியல்கள் தொடர்பாக சரியான புள்ளி விபரங்களை பெற்றுக் கொள்வதற்கு கடினமாகவுள்ளது. | நிதிப் பிரமாணம் 502(ஆ) பிரகாரம் கிடைக்க வேண்டிய மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நிதிப் பிரமாணம் 571 | 82,801,855 | பொது வைப்புக் கணக்குகள் 04 இற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. | இம் மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க சிறைச்சாலை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நிதிப் பிரமாணம் 751(1) | - | திணைக்களத்திற்கு கிடைக்கும் அனைத்து பண்டங்களையும் உடனடியாக பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்த வேண்டிய போதும், மாதிரி அடிப்படையில் மேற்கொண்ட | உரிய சீராக்கத்தை மேற்கொள்ளுமாறும், பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்தவுடன் பதிவேடுகளில் பதியுமாறும் | நிதிப் பிரமாணம் 751(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிசோதனையின் போது வெலிகட, மஹர, கொழும்பு சிறைச்சாலை, நவ மெகஸின் மற்றும் வட்டரெக்க ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்படும் மூல உணவுப் பொருட்கள் உணவு பொருட் பதிவேட்டுப் பிரிவின் மூல உணவு பதிவேட்டில் மாத்தரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | அனைத்து களஞ்சிய பொறுப்பாளர்களும் அறிவூட்டப்பட்டுள்ளனர். | |
| நிதிப் பிரமாணம் 756(6) | - | முன்னைய ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கையை எதிர்வரும் ஆண்டு ஜுன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், 2021 ஆண்டின் பண்டக கணிப்பீட்டறிக்கைகளின் பொது 47 அறிக்கைளில் குறிப்பிடப்படும் பொருட்கள் தொடர்பாக பொறுத்தமானவாறு நடவடிக்கை எடுப்பது தொடர்பான அறிக்கை 2023 மே 25 திகதி வரையும் சமர்பிக்கப்படாமை மற்றும் 2022 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கை சமர்பித்தல் 2023 ஜுலை 14 திகதி வரை சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு செயற்பாடுகளிற்குரிய பொது 47 ஆவணங்களில் குறிப்பிடப்படும் அனைத்து பண்டங்கள் தொடர்பாக குறித்த எழுத்து பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | நிதிப் பிரமாணம் 756(6) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நிதிப் பிரமாணம் 770(4) | - | சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படும் 44 வாகனங்கள் தொடர்பாக பராதீன நடவடிக்கை மேற்கொள்ளாமை மற்றும் இன்னும் 19 வாகனங்கள் தொடர்பாக பராதீன நடவடிக்கைகளிற்கான பரிந்துரைகள் பெறப்பட்டிருந்த போதும், இது வரை பராதீன நடவடிக்கைகளை முடிவுறுத்தாமை. | வாகனங்கள் 07 இனை, ஏல விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, இன்னும் 12 வாகனங்களை திணைக்களத்தின் பெயருக்கு சுவீகரித்துக் கொண்டு பராதீன நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 770(4) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 780 | 522,272 | அரச வேலைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்ளும் போது சிக்கனமாக மற்றும் வினைத்திறனுடன் கூடியதாக அவற்றை மேற்கொள்ளும் தேவைப்பாடு பற்றி ஒவ்வொறு திணைக்களங்களும் உரியவாறு கவனத்திற் கொள்ள வேண்டும். எனினும் அதற்கு இணங்காது களுதுறை, வெலிகட மற்றும் சிறைச்சாலைகள் தலைமையகம் ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் 2022 ஆண்டினுள் மின்சார பட்டியல்களற்காக கொடுப்பனவு செய்யும் போது உரிய காலப் பகுதியினுள் செலுத்தாத காரணத்தால் தண்டப்பணமாக (மிகை அறவீடு) செலுத்தப்பட்டு இருந்தது. | கட்டுநிதி உரியவாறு கிடைக்காத காரணத்தால் மின்சார பட்டியல்களிற்கு உரிய காலத்தினுள் கொடுப்பனவு செய்ய முடியாது போனது. | நிதிப் பிரமாணம் 780 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 முறையற்ற கொடுக்கள் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சதுர அடி 1800 இற்கு அதிக அளவான காணி அளவொன்றில் காட்டிடங்கள் மற்றும் அளவின்றி மின்சாரம் மற்றும் நீரை பயன்படுத்தி அநுராதபுர சிறைச்சாலையின் வளங்களை பயன்படுத்தி நலன்புரி சங்கத்தினால் நடாத்திச் செல்லும் உணவகம் எனும் பெயரில் தனியார் வியாபார நடவடிக்கையொன்றாக பாரியளவிலான உணவகமொன்றை நீண்ட காலமாக நடாத்தப்பட்டு வருகின்றது. இந் உணவத்திலிருந்து கைத்தொழில் பிரிவின் வெதுப்பக உற்பத்தி பொருட்களை தினந்தோறும் விற்பனை செய்வதால் கிடைக்கும் வருமானம் ரூபா 19,000 ஆன போதும், பாவனயாளர்களுக்கு வேறு பண்டங்களை மற்றும் சேவைகளை | அநுராதபுர சிறைச்சாலையின் நலன்புரி விற்பனை நிலையத்தை நடாத்திச் சென்ற சிறைச்சாலை அலுவலரை குறித்த நடவடிக்கைகளிலிருந்து அகற்றி அதற்காக வேறு அலுவலர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக விசாரணை நடாத்தி அறிக்கையொன்றை | தாபன விதிக்கோவை XLVII அத்தியாயத்தின் 1:5 மற்றும் 1:11 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வழங்குவதற்குரியதாக ரூபா 300,000 இற்கு கிட்டிய வருமானமொன்றை ஈட்ட முடியுமான போதும், அதற்காக பட்டியல்கள் வழங்கப்படுவதில்லை. உணவகத்தில் தினந்தோறும் 6 சிறைக் கைதிகளிற்கு அதிக எண்ணிக்கையானவர்களை கடமையில் ஈடுபடுத்தி இருந்ததுடன், உணவகத்திற்கு இணைத்து சேவையாற்றும் சிறைச்சாலை அலுவலரிற்காக 2022 ஆண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 707,241 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. மிகக் குறைந்த இலாபப் பங்கொன்றை மாதாந்தம் ஈட்டிய இலாபமாக நலன்புரி சங்கத்திற்கு செலவு வைத்த போதும், அரச வருமானத்திற்கு எத்தொகையும் செலவு வைக்கப்படுவதில்லை. உணவகத்திற்கு இணைத்துள்ள அலுவலரினால் அதிகுளிரூட்டி, குளிரூட்டி, வீட்டு உபகரணங்கள் போன்ற மிக்க விலைமதிப்புள்ள பல பொருட் பதிவேட்டு பண்டங்கள் உணவகத்திற்கு தனிப்பட்ட ரீதியாக வழங்கப்பட்டிருந்தன. | நீதிமன்ற அமைச்சின் பிரதிநிதி ஒருவருடன் கூடிய குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை கிடைத்த பின்னர், எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கையிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(2) பிரகாரம், பெற்றுக் கொண்ட முற்பணத் தொகையை பணியை பூர்த்தி செய்தவுடனே தீர்க்க வேண்டிய போதும், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பல பணிகளிற்காக 11 சந்தர்ப்பங்களில் வழங்கி இருந்த ரூபா 357,480 ஆன முற்பணத் தொகை, பணத்தை தீர்க்க வேண்டிய தினத்தியிலிருந்து 18 நாட்கள் முதல் 236 நாட்கள் இடையிலான காலமொன்று தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | முற்பணம் தீர்ப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், உரிய பணி பூர்த்தியாகிய உடனே கட்டுநிதியை தீர்ப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 371(2) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.6 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கி கணக்குகளை செயற்படுத்துவது தொட்ரபாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்படடுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியன்று 12 வங்கிக் கணக்குகளில் விநியோகித்த திகதியிலிருந்து 06 மாதங்களை கடந்த வங்கிக்கு | 2023 மார்ச் மாத வங்கிக் கூற்றுக்களில் 2022 ஆண்டிற்கு உரியதாக தீர்க்கப்பட வேண்டியுள்ள காசோலை | நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமர்பிக்கப்படாத கூட்டுத் தொகை ரூபா 112,707 ஆன 24 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமானத்தை நிதி தொடர்பான பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிறைசாலைகள் திணைக்களத்தின் கைத்தொழில் பிரிவின் செயலாற்றுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கைத்தொழில்கள் செயற்படுத்தப்படும் 18 சிறைச்சாலை நிறுவனங்களிற்கு இடையில் 07 இனது 11 வேலை பிரிவுகளில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. சிறைச்சாலை நிறுவனங்கள் 05 இனது உற்பத்திகள் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டில் 16 சதவீதத்திற்கும் 77 சதவீதத்திற்குமிடையிலான வீச்சளவில் குறைவொன்று காணப்பட்டதுடன், சிறைச்சாலை நிறுவனங்கள் 03 இனது விற்பனைகள் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டில் 42 சதவீதத்திற்கும் 48 சதவீதத்திற்குமிடையிலான வீச்சளவில் குறைவொன்று காணப்பட்டது. | மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதன் கடினம், சிறைசாலை ஊதியம் போதாமை, பௌதீக வளங்களின் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களின் மீது உற்பத்தி இடம்பெறாமை, உற்பத்திகளை குறைவாக மேற்கொண்டமை மற்றும் விற்பனை குறைவதற்கு காரணமாக இருந்தது. | சிறைசாலைகள் திணைக்களத்தின் கைத்தொழில் பிரிவின் நோக்கம் போதியளவு நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறைசாலைகள் திணைக்களத்தினால் நாட்டினுள் எந்தவொறு நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் சிறைப்படுத்தப்படும் அனைத்து தரத்திலான சிறைக் கைதிகளை வரவேற்றல் மற்றும் சிறைச்சாலை சட்ட திட்டங்களிற்கு இணங்க அவர்களின் பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் புனர்வாழ்வு | | |

| | | |
|---|---|---|
| போதியளவில் வழங்க மற்றும் சிறைசாலைகளின் புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய சிறைச்சாலைகளின் நெரிசலை குறைத்தல், நவீன தொழிநுட்பத்தை அறிமுகம் செய்தல், பௌதீக வளங்களை மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களிலிற்கிடையில் முக்கியமானதாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) கைதிகளிற்கு தேவையான இடவசதிகளின் பற்றாக்குறை | | |
| ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளிற்கு இணங்கும் வகையில் கைதிகளின் உலரீதியான மற்றும் உடல் ரீதியான தகைமைகளிற்கு பொருந்தும் வகையில் போதிய இடவசதி இருக்க வேண்டிய போதும், 2022 ஜுலை 01 திகதியளவில் 14 சிறைச்சாலைகளில் ஆண் கைதிகளிற்காக 108,689 சதுர அடி குறைவான இடவசதிகள் காணப்பட்டன. | அவதானிப்புடன் இணங்குகிறேன். சிறைபடுத்தப்படும் கைதிகளின் அளவு தினந்தோறும் அதிகரித்தல், வாட்டுகள் மற்றும் சிறையறைகளில் இடவசதிகள் போதியளவில் இல்லாதமை தாக்கம் செலுத்தியுள்ளது. அவ்வாறாயினும் எந்த நேரத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் சிறைச்சாலை கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆகக்கூடிய முயற்சிகள் எடுக்கப்படும். | ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களிற்கு இணங்க மற்றும் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் (54 அதிகாரம்) 94 பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 179 விதிக்கு மற்றும் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) சிறைச்சாலை கொள்ளவின் பிரகாரம் தடுத்து வைக்க முடியுமான கைதிகள் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை. | | |
| 2022 திசெம்பர் 31 திகதியன்று சிறைச்சாலை கொள்ளவின் பிரகாரம் தடுத்து வைக்க முடியுமான கைதிகள் | அவதானிப்புடன் இணங்குகிறேன். சிறைபடுத்தப்படும் கைதிகளின் அளவு தினந்தோறும் | ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களிற்கு இணங்க மற்றும் சிறைச்சாலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 11,291 ஆன போதும், அதனை விஞ்சி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 14,885 ஆனது. 2022 திசெம்பர் 31 திகதியளவில் 27 ஒவ்வொறு சிறைச்சாலை நிறுவனங்களினதும் புள்ளி விபரவியல் தகவல்களின் பிரகாரம் கொள்ளவை விஞ்சிய கைதிகளின் எண்ணிக்கையின் வீச்சளவு 62 முதல் 1,907 வரை உச்ச பெறுமானமானது. | அதிகரித்தல், வாட்டுகள் மற்றும் சிறையறைகளில் இடவசதிகள் போதியளவில் இல்லாதமை தாக்கம் செலுத்தியுள்ளது. அவ்வாறாயினும் எந்த நேரத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் சிறைச்சாலை கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆகக்கூடிய முயற்சிகள் எடுக்கப்படும். | கட்டளைச் சட்டத்தின் (54 அதிகாரம்) 94 பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 179 விதிக்கு மற்றும் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சுகாதார வசதிகள் போதியளவில் இல்லாமை | | |
| | 2023 ஏப்ரல் 30 திகதியளவில் 27 சிறைச்சாலைகளில் 187 மலசலகூடங்களின் பற்றாக்குறை நிலவியதுடன், தற்போது காணப்படும் மலசலகூடங்களில் 278 ஆனது திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்டன. | 2022 ஆண்டின் நான்காம் காலாண்டில் 46 மலசலகூடங்களை நிர்மாணிக்கவும், 291 இனை திருத்தவும், 36 ஊனமுற்றோர் மலசலசூகூடங்களை திருத்த மற்றும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | போதிய சுகாதார வசதிகளை வழங்க வேண்டும். |
| (ஈ) | சிறைக் கைதிகளை வகைப்படுத்தாது தடுத்து வைத்தல் | | |
| | சிறைச்சாலை கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க கைதிகளை குழுக்களாக வேறாக்கி தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். எனினும் கணக்காய்வினால் சிறைச்சாலைகளில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனைகளின் போது 04 சந்தர்ப்பங்களில் 2,222 கைதிகள் வகைப்படுத்தப்படாது தடுத்து வைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | சிறைச்சாலையில் இடவசதிக்ள உள்ளவாறு ஒவ்வொறு வகைக்கும் உரிய சிறைக் கைதிகளை வெவ் வேறாக வைத்துக் கொள்ள அநேகமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச தரத்திற்கு இணங்க மற்றும் இலக்கம் 2288/15 மற்றும் 2022 ஜுலை 12 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியினால் திருத்திய சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் (54 அதிகாரம்) 94 பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 178 விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சிறை வாட்டு, சிறைகூடம் மற்றும் சிறையறைகள் பழுதடைந்து காணப்பட்டமை | | |
| | அநுராதபுரம், களுத்துறை மற்றும் கேகாலை சிறைச்சாலைகளில் மேற்கொண்ட பௌதீக | அவதானிப்புடன் இணங்குகிறேன். பழுதடைந்த கட்டிடங்களை | சிறைப்படுத்தப்படும் அனைத்து தரத்திலுமான சிறைக் கைதிகளிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைகளில் திருத்தாத பழுதடைந்து காணப்பட்ட கட்டிடங்கள் காணப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக வெலிகட சிறைச்சாலையில் D மற்றும் செபல் வாட்டு வளவுகளும் பழுதடைந்து காணப்பட்டன. | திருத்த 2023 வரைபு மதிப்பீடொன்றின் மூலம் தற்போது கோரப்பட்டுள்ளது. அநேகமான சிறைச்சாலை நிறுவனங்களின் கட்டிடங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் காணப்பட்ட போதும் கிடைக்கும் ஏற்பாடு மற்றும் கட்டுநிதி இதற்காக போதாமை காரணமாக ஏற்பாடுகளை உச்ச நிலையில் பயன்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் கட்டிட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சிறைச்சாலை சட்ட திட்டங்களிற்கு இணங்க அவர்களின் பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் பராமரிப்பை வழங்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | சிறைக் கைதிகளை புனர்வாழ்வு செய்ய தேவையான மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் போதியளவு இல்லாததால் முறையான புனர்வாழ்வை மேற்கொள்ள சந்தர்ப்பம் இல்லாமை | | |
| | 2022 நவம்பர் 01 திகதியளவில் நீதிமன்றத்தால் புனர்வாழ்விற்காக கட்டளை வழங்கி புனர்வாழ்வு மத்திய நிலையங்களிற்கு அனுப்ப எதிர்பார்த்து 06 மாதங்களிற்கு அதிக காலமாக வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்த கைதிகளின் எண்ணிக்கை 1,271 ஆனது. | அவதானிப்புடன் இணங்குகிறேன். சிறைச்சாலைகளினுல் காணப்படும் அதிக நெருக்கடி புனர்வாழ்வு பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய சவாலான விடயமாகவுள்ளது. சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளின் அதிகமானவர்கள் போதை பொருள் தொடர்பான தவருகளிற்காக சிறைப்படுத்தப்பட்டவர்களாவர். இவ்வாறான குற்றவாளிகளை வேறாக்கி தடுத்து வைத்து புனர்வாழ்வு மேற்கொள்ள "அமதிவி ரித்ம" வேலைத் திட்டத்தை 09 சிறைச்சாலை நிறுவனங்களில் ஆரம்பிக்கப்பட்டள்ளது. | புனர்வாழ்விற்கு தேவையான மனிதவள மற்றும் பௌதீக வளங்களை போதியளவில் பெற்றுக் கொண்டு சிறைக் கைதிகளை முறையாக புனர்வாழ்வு செய்ய வேண்டும். |
| (எ) | சிறைப்படுத்தப்பட்டவர்கள் மீணடும் மீண்டும் சிறைப்படுத்தப்படல் | | |
| | கணக்காய்வினால் மாதிரி அடிப்படையில் 05 சிறைச்சாலைகளில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது | மேற்குறிப்பட்ட வாறு முறையான புனர்வாழ்வொன்றை மேற்கொள்ள சந்தர்ப்பம் இல்லாததுள்ள காரணத்தால் | மீணடும் மீண்டும் சிறைப்படுத்தப்படுவதனை குறைத்துக் கொள்ள சக்திவாய்ந்த மற்றும் போதிய புனர்வாழ்வு |

| | | |
|---|---|---|
| 2022 சனவரி முதல் ஆகஸ்ட் மாதம் இறுதி வரையான காலப் பகுதியினுள் மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டுள்ள சிறைக் கைதிகள் 1,029 ஆனது. | இவ்வாறான நிலைமை ஏற்பட முடியும். | செயற்பாடொன்றை ஏற்படுத்துதல். |
| (ஏ) பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்படாததால் சிறைக் கைதிகள் நீண்ட காலமாக சிறைப்படுத்தப்படல். | | |
| நீதிமன்றத்தால் சிறைப்படுத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களிற்கு உரியதாக பொலீஸினால் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்பித்த போதைப் பொருள் மாதிரிகளிற்குரிய பகுப்பாய்வு அறிக்கை இதுவரை சமர்பிக்கப்படாததால் 2022 திசெம்பர் 31 திகதியளவில் விளக்கமரியலில் சிறைப்படுத்தியுள்ள சந்தேநபர்களின் எண்ணிக்கை 5,676 ஆகும். | அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் மூலம் இந்த சந்தேக நபர்களின் பகுப்பாய்வு அறிக்கை பெற்றுத்தருதல் தாமதமாகுதல் மீது அவர்கள் நீண்ட காலமாக சிறைப்படுத்தப்பட்டு இருக்கும் நிலைமையை சிறைச்சாலை திணைக்களத்திற்கு கட்டுப்படுத்த முடியுமான நிலைமையல்ல என சுட்டிக் காட்டப்படுகிறது. | கால தேவைக்கு பொருத்தமானவாறு கைதிகளை நற்பிரசையாக வெளியேற்ற தேவையான சமுதாய பின்புலம் உருவாகும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) சிறைக் கைதிகளின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் | | |
| 2022 திசெம்பர் 31 திகதியன்று சிறைச்சாலையை காலை திறத்தலின் பிரகாரம் கைதிகளில் 53 சதவீதத்தினர் போதை பொருட்கள் தொடர்பான தவறுகளிற்காக தண்டனை அனுபவிக்கும் மற்றும் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளாகும். இந்த கைதிகளிலும் 68 சதவீதத்தினர் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களாவர். போதை பொருள் தவறுகள் தொடர்பாக சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளில் அநேகமானர்கள் போதை பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்கள் ஆகையால் எவ்வாறேனும் தேவையான போதை பொருள் அளவை பெற்றுக் கொள்ள அவர்கள் முயல்வதுடன் அவ்வாறான நிலைமையை தடுக்க சிறைச்சாலை | அவதானிப்புடன் இணங்குகிறேன். தற்போது இதற்கு பரிகாரமாக தீவிர வகையிலான குற்றவாளிகளை பூஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாயில் தடுத்து வைத்தல், அங்குணகொளபெலஸ்ஸ, களுத்தரை, நீர்கொழும்பு, மஹர மற்றும் போகம்பர போன்ற சிறைச்சாலைகளில் பாதுகாப்பு கெமரா தொகுதிகளை தாபித்தல், சிறைச்சாலை திணைக்களத்தினுள் அவசரகால பதில் தந்திரோபாய படை எனும் பெயரில் அலகொன்றை தாபித்தல், சிறைச்சாலை நிறுவனங்களிற்காக தொலைபேசி இடையூரு செய்யும் சைக்கினைத் தொகுதியை பொருத்துதல் போன்ற முறைமைகள் | சிறைச்சாலையின் ஆரம்ப நோக்கமான சிறைகைதிகளின் பாதுகாப்பை வழங்க தடையாகவுள்ள சூழ்நிலைகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| அலுவலர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்த நேரிடுவதுடன் அதற்காக மனிதவளம் போதியளவாக இல்லாததால் சிறைச்சாலை உள்ளக பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகளிற்கும் அது தடையாக இருக்கின்றது. | தற்போது செயற்படுத்தப்படுகின்றது. |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

பினவரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சிறைச்சாலை திணைக்களத்தின் ரூபா 221 மில்லியனான முகாமைத்துவ தகவல் தொகுதியை தாபிக்கும் கருத்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 151,915,478 செலவிடப்பட்டு இருந்தது. தகவல் முகாமைத்தவ தொகுதியை சிறைச்சாலை நிறுவனங்களினுள் செயற்படுத்தும் போது பிரதான நுழைவாயில், சிறை பதிவு செய்தல், சிறைச்சாலை இடமாற்றங்கள், விடுதலை செய்யும் நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன. ஒழுக்கம், கைத்தொழில், புனர்வாழ்வு, சிறை தனியார் சொத்தக்கள் முகாமைத்துவம், பிரமுகர்களை காண்பித்தல் மற்றும் உணவு பண்டகப் பிரிவு போன்ற செயற்பாடுகள் இத்தகவல் முகாமைத்துவ தொகுதியை பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படுவதில்லை. | இத் தொகுதிக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளத்தை பெற்றுக் கொள்ள முடியாததன் மீது நடவடிக்கைகளை வினைத்திறமனாக மேற்கொள்வது கடினமாகவுள்ளது. | கருத்திட்டத்தால் எதிர்பாரக்கப்படும் நோக்கத்தை போதியதாக அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்**

பினவரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கைதிகளின் உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்களுக்கு இணங்கும் | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 03/2022 மற்றும் 2022.04.26 | நடைமுறைப்படுத்துவதைன தற்காலிகமாக நிறுத்தியுள்ள வெலிகட |

| | | |
|---|---|---|
| வகையில் பாதுகாக்கவும், கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் உரியவாறு கைதிகளை புனர்வாழ்வு செய்யும் எதிர்பார்ப்பில் ரூபா 30.6 பில்லியன் எதிர்பார்த்த கிரயத்தின் மீது பொரள்ளையில் அமைந்துள்ள வெலிகட சிறைச்சாலை கட்டிடத் தொகுதியை ஹொரன மில்லேவ பிரதேசத்தில் மீள் இஸ்தாபிக்கும் கருத்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்தது. இக் கருத்திட்டத்திற்குரியதாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, திட்டம் மற்றும் நிர்மாண பணிகள், உள்ள பாதைகள், நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் 30 சதவீதமளவு பூர்த்தி செயதிருந்த போதும் நிதி அமைச்சினால் வெளிட்ட 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் இக்கருத்திட்டத்தை செயற்படுத்துவதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | திகதிய சுற்றறிக்கை பிரகாரம் இக்கருத்திட்டத்தை செயற்படுத்துவதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | சிறைச்சாலை கட்டிடத் தொகுதியை ஹொரன மில்லேவ பிரதேசத்தில் மீள் இஸ்தாபிக்கும் கருத்திட்டத்தை விரைவில் ஆரம்பித்து செயற்படுத்த வேண்டும். |

**3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

பினவரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹங்கிலிபொல விவசாய பண்ணையில் நீர்குழாய்த் தொகுதியை ஸ்தாபித்தல் 2022 செப்டம்பர் 20 திகதி ரூபா 656,728 செலவில் ஹங்கிலிபொல வெளியரங்கு சிறை முகாமில் விவசாய பண்ணையில் நீர்குழாய்த் தொகுதியை ஸ்தாபிப்பதற்காக நீர் மோட்டாரொன்றை மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்திருந்த போதும் இதுவரை குறித்த நீர்குழாய் தொகுதியை ஸ்தாபித்திருக்கவில்லை. | குறித்த இடத்திற்கு மின்சாரத்தை பெற்றுக் கொள்வதன் பிரச்சினையின் மீது நீர்குழாய் தொகுதியை ஸ்தாபிக்க முடியாதுள்ளது. | நீர்குழாய் தொகுதியை கூடிய விரைவில் ஸ்தாபித்து கருத்திட்டத்தின் நலன்களை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 பெறுகைகள்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரிசி வழங்கல் | | |
| (i) அரிசி கிலோகிராம் ஒன்றின் பெறுகை விலை பிரதேச விலையை விட உயர் பெறுமானத்தை கொண்டுள்ளமை. | | |
| 2022 ஜுலை 18 திகதி முதல் 2022 நவம்பர் 03 திகதி வரை காலப் பகுதியினுள் வருடாந்த பெறுகையின் பிரகாரம் வழங்குனர்களால் அரசியை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் சிறைச்சாலையினால் பிரதேச கொள்வனவின் கீழ் அரிசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யப்பட்ட 21 சந்தர்ப்பங்களில் வருடாந்த பெறுகை விலையையும் விட அரிசி கிலோகிராம் ஒன்றின் விலை குறைந்ததால் ரூபா 3,079,304 ஆன செலவை சேமித்துக் கொள்ள முடியுமாக இருந்தது. | பணம் பின்னர் செலுத்தும் அடிப்படையில் அரிசி வழங்கும் போது வங்கி மேலதிக பற்றிற்காக சில சதவீதத்தை விலையுடன் சேர்த்துள்ளதால் பிரதேச விலையை விட பெறுகை விலையில் அதிகரிப்பொன்று ஏற்படுகின்றது. பெறுகை நடைமுறையின் போது 3 மாதங்களிற்கு ஒரு முறை விலை திருத்தமொன்று மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 128(1))(ஒ) மற்றும் 156(7) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) உள்நாட்டு நாட்டரிக்கு பதிலாக வெளிநாட்டு நாட்டரிசியை வழங்குதல். | | |
| ❖ வெலிகட, நவ மெகஸின், கொழும்பு ரிமான்ட், மஹர மற்றும் வட்டரெக்க ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் மாதிரி அடிப்படையில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வருடாந்த பெறுகைகள் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களினால் உள்நாட்டு நாட்டரிசி வழங்க வேண்டிய போதும், அதற்கு பதிலாக 68 சந்தர்பங்களில் வெளிநாட்டு நாட்டரிசி 413,593 கிலோகிராம் வழங்கப்பட்டிருந்தன. | நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையில் உள்நாட்டு அரிசி பற்றாக்குறையின் மீது வழங்குனர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட அரசி வழங்கப்பட்டுள்ளது. அதன் போது சந்தையில் நிலவிய விலைகளின் பிரகாரம் செம்மையாக்கம் செய்து மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 137 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

- ❖ கணக்காய்வு அவதானிப்பினால் சுட்டிக் காட்டிய பின்னர் வழங்குனரினால் உள்நாட்டு நாட்டரிசிக்கு பதிலாக 50 கிலோகிராம் அரிசி உறைகளிற்கு உள்நாட்டு அரிசியை இட்டு வெளிநாட்டு நாட்டரிசி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக வெலிகட, நவ மெகஸின், கொழும்பு ரிமான்ட் ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களின் களஞ்சியங்களிற்கு 11,000 கிலோகிராம் அரசி வழங்கப்பட்டு இருந்ததுடன் இவற்றில் 5,500 கிலோகிராம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூல மற்றும் உளர் உணவுப் பொருட்களை வழங்குதல்

மாதிரி அடிப்படையில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வருடாந்த பெறுகைகளிற்குரிய பொருட்களை வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | வெலிகட, நவ மெகஸின், கொழும்பு ரிமான்ட், மஹர, மொனராகல, நீர்கொழும்பு, அநுராதபுர மற்றும் வட்டரெக்க ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் மூல உணவுப் பொருட்களை வழங்கும் போது சந்தை விலைகள் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததாரர்களிற்கு நன்மை பயக்கும் வகையில் வழங்கியமை. | சிறைச்சாலை நிறுவனங்களிற்கு மூல உணவுப் பொருட்களை பின்னர் செலுத்தும் அடிப்படையில் கொள்வனவு செய்வதுடன், தொடர்ந்து வழங்கும் நிபந்தனையின் மீது ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 156(7) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | வெலிகட, நீர்கொழும்பு மற்றும் கொழும்பு ரிமான்ட ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களிற்கு மூல உணவுகளை வழங்கும் போது வழங்குனர்கள் அளவுத் திட்டத்திற்கு பொருந்தாத மற்றும் நுகர்விற்கு பொருத்தமற்ற மூலு உணவுப் பொருட்களை வழங்குதல். | சிறைச்சாலை நிறுவனங்களிற்கு உரிய பொருட்களை வழங்கும் போது பெறுகைகள் அளவுத் திட்டத்திற்கு இணங்க பரிசோதித்து பெற்றுக் கொள்ள தேவையான ஆலோசனைகள் மும் மொழிகளிலும் வழங்கியுள்ளதுடன், பொது சுகாதார பரிசோதகர்களினால் இப் பொருட்கள் பரிசோதிக்கப்படுகின்றன. | நிதிப் பிரமாணம் 137 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வெலிகட, நவ மெகஸின், நீர்கொழுப்பு மற்றும் கொழும்பு ரிமான்ட் ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் வழங்குனர்களால் மூல உணவுப் பொருட்களை வழங்கும் போது உரிய நேரத்தை விட தாமதித்து தினந்தோறும் மூல உணவுப் பொருட்களை வழங்குதல். | பௌதிக காரணங்களால் ஒரு சில வழங்குனர்கள் பொருட்களை வழங்கும் போது தாமதமாகுவதாக எங்களாலும் அவதானிக்கப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் நிதமும் பலக்கமாக இடம்பெறாதிருக்க பொறுப்பேற்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 137 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி | | |
| (i) | ஏக்கர் 369.9 ஆன காணிகளின் உரிமை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதும் பெறுமதியை மதிப்பிடாததால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இக் காணிக்கான மதிப்பீட்டு அறிக்கையை விரைவில் பெற்றுத்தருமாறு உரிய மாகாண மதிப்பீட்டு அலுவலகங்கள் மற்றும் அரச பிரதான மதிப்பீட்டாளரிடமும் கோரப்பட்டுள்ளது. | சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமாகவுள்ள காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சிறைச்சாலை, சிறையறை, திறந்த சிறை முகாம், புனர்வாழ்வு மத்திய நிலையம் மற்றும் பண்ணைகள் என சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பயன்படுத்தியிருந்த 315.2568 ஏக்கரான காணியளவின் உரிமையை சுவீகரித்தல், பெறுமதியை மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்காத காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை தற்போது துரிதமாக மேற்கொண்டு வருவதுடன், இது தொடர்பாக அனைத்து சிறைச்சாலை அதிகாரிகளையும் அறிவூட்டியுள்ளதாக. | இக் காணிகளின் உரிமையை சவீகரத்து பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | | |
| (i) | சிறைச்சாலைகளின் உபகரண களஞ்சியங்களில் பௌதீக இருப்பு பரிசோதனையின் போது ரூபா 51,993 பெறுமதியான 07 இருப்பு உருப்படிகளில் பற்றாக்குறையும் | சிறைச்சாலை நிறுவனங்களின் களஞ்சியங்களிற்கு கிடைத்தவற்றை புத்தகங்களில் குறிக்காததால் இந்த தவறு ஏற்பட்டுள்ளதால் | இருப்பு தொடர்பாக பற்றாக்குறை மற்றும் வித்தியாசம் ஏதும் இருப்பின் நிதிப் பிரமாணம் 757(2) |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 282,286 பெறுமதியான 18 இருப்பு உருப்படிகளில் மிகையும் நிலவின. | சீராக்க மற்றும் பண்டங்கள் கிடைத்தவுடனே மற்றும் விநியோகித்தவுடனே உரிய புத்தகங்களில் குறிப்பிட சரியான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கிடைக்கின்ற அனைத்து பண்டங்களையும் உடனடியாக இருப்பு புத்தகங்களில் உட்படுத்த வேண்டிய போதும், வாரியபொல மற்றும் வட்டரெக்க சிறைச்சாலை நிறுவனங்களில் பௌதீக ரீதியான நிலவிய 74 விடயங்களிற்குரிய 115,764 அளவான மருந்து அலகுகள் இருப்பு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மருந்து கலவை அலுவலர்களுக்கு இதற்காக தேவையான ஆலோசனை வழங்கியதுடன், நிதிப் பிரமாணம் பிரகாரம் இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 751(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விளைவற்ற சொத்துக்கள் | | |
| | மாதிரி அடிப்படையின் மீது மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது 07 சிறைச்சாலை நிறுவனங்களில் 02 மின் பிறப்பாக்கிகள், 107 CCTV கெமராக்கள், 09 தீயணைக்கும் உபகரணங்கள், வாயு பயன்படுத்தி உணவு சமைக்கவுள்ள அடுப்புத் தொகுதியொன்று, மின்சார அடுப்பொன்று (Oven), கெசட் ரெகோடரொன்று மற்றும் டீ.வீ.டீ. இயந்திரம் விளைவற்ற சொத்துக்களாக காணப்பட்டன. | பராதீனம் செய்ய வேண்டிய பண்டங்களை பராதீனம் செய்யவும் திருத்த வேண்டிய நிலையிலுள்ள பண்டங்களை இனங்கண்டு திருத்தவும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | விளைவற்று காணப்படும் சொத்துக்களை பொருத்தமானவாறு திருத்த அல்லது பராதீனம் செய்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | குறை பயன்பாட்டு சொத்துக்கள் | | |
| | மாதிரி அடிப்படையின் மீது மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது வட்டரெக்க மற்றும் தல்தென ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் 02 புலொக் கல் இயந்திரங்கள் குறை பயன்பாட்டு சொத்தாக நிலவின. | அவதானிப்புடன் இணங்குகிறேன். எதிர்காலத்தில் உற்பத்தி செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படும். | குறை பயன்பாட்டு சொத்துக்களை பூரண கொள்ளலவுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 நட்டங்களும் சேதங்களும்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் 103 விபத்துக்கள் உள்ளிட்ட 108 சம்பவங்களிற்குரிய நட்டம் ரூபா 37,546,184 தொகையும், 05 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலவிவரும் 71 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 72 சம்பவங்களிற்குரிய நட்டம் ரூபா 15,302,592 தொகையும், 2022 ஆண்டிலான 25 வாகன விபத்துக்கள் உள்ளடங்களாக 05 ஆண்டுகளிற்கும் குறைந்த காலமாக நிலவிவரும் 92 விபத்துக்கள் உள்ளிட்ட 93 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 31,746,145 சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 103(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | இந்த சம்பவங்களின் பெரும்பாளவற்றின் நட்டம் காப்புறுதிக் கம்பனியினால அறவிட்டுக் கொண்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன், எவ்வாறு நட்டத்தை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ள சம்பவங்களை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நியமித்துள்ள குழுவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | வாகன விபத்துக்கள் உள்ளிட்ட நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1) இல் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (1) இன் கீழ் தொடர்ந்தும் அறவிட அல்லது பதிவழிக்க அல்லது கைவிடவுள்ள நட்டம் மற்றும் சம்பவங்கள் 273 இற்கிடையில் 2017 ஆண்டு முதல் 2022 ஆண்டு இறுதி வரை ஏற்பட்ட நட்டம் 21 இனது நட்டங்களை மதிப்பிட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் 21 தொடர்பாக நட்டங்கள் மற்றும் சேதங்களின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | வாகன விபத்துக்கள் உள்ளிட்ட நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103(1) இல் குறிப்பிடுவதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 104(3) பிரகாரம் சம்பூரண அறிக்கையொன்றை சமர்பிக்க 07 நாட்களைவிட அதிக தாமதம் ஏற்படுமென எதிர்பார்ப்பின் காணாமல் போதல் மற்றும் நட்டமேற்படல் தொடர்பாக ஆரம்ப அறிக்கையொன்றை உடனடியாக அனுப்ப வேண்டும். எனினும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குரிய 07 நாட்களை விட தாமதம் ஏற்பட்டுள்ள 253 நட்டங்களும் சேதங்களும் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) பிரகாரம் ஆரம்ப அறிக்கை சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய அறிக்கையை அனைத்து நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சிறைச்சாலைகளில் பாதுகாப்பை சிறப்பாக பேணிச் செல்வதற்காக சிறைச்சாலை நுழைவாயில்களில் பேணிச் செல்லும் புத்தகங்கள் மற்றும் உள்வரவு மற்றும் வெளிச் செல்லல் தொடர்பான அனைத்து விபரங்களையும் சரியாக உள்ளடக்கி பேணிச் செல்லப்படுகின்றது. அதன் பிரகாரம் சிறைச்சாலை வைத்திசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களின் வரவு, வெளிச் செல்லலும் முறையாக அப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளிலும் குறிப்பிடப்படுகின்றன. வைத்திய அலுவலர்களின் கடமை புத்தகத்தில் குறிப்பிடப்படும் வரவு, வெளிச் செல்லல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வைத்திய அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தும் போது சிறைச்சாலை புத்தகங்களின் பிரகாரம் வைத்திய அலுவலர்கள் கடமைக்கும் அறிக்கையிடாத காலத்தையும் கடமைக்கு அறிக்கையிட்ட காலமாக கருதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது மேற்கொண்ட மாதிரி பரிசோதனையின் போது 2022 ஆண்டில் ஒரு மாதத்தினுள் (மார்ச் / மே / ஜுலை) 05 சிறைச்சாலை நிறுவனங்களின் வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டு கடமையாற்றும் தரத்திலான 24 வைத்தியர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட 09 வைத்தியர்களிற்காக ரூபா 7,879,273 சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டு இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (i) | சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 02-20/2014 மற்றும் 2014 பெப்ரவரி 05 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வைத்தியர்கள் வார நாட்களில் ஒரு தினத்திற்கு 06 மனித்தியால குறைந்த பட்ச காலமும் சனி நாட்களில் 04 மனித்தியால காலமும் கடமையாற்ற வேண்டிய போதும், மேற் குறிப்பிட்ட சிறைச்சாலை வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டு கடமையாற்றும் 33 வைத்தியர்கள் ஒரு மாத காலப் பகுதிக்காக 4,570 மொத்த மனித மனித்தியாலங்கள் கடமையாற்ற வேண்டிய போதும் 1,296 மனித மனித்தியாலங்களும் 35 நிமிடங்களும் மாத்திரமே கடமையாற்றி | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2003 பெப்ரவரி 14 திகதிய கடிதத்தின் பிரகாரம் வைத்திய அலுவலர்களின் மற்றும் பதிவு செய்யப்பட்ட வைத்திய அலுவலர்களின் படிகளை உறுதி செய்யும் போது அவ் வைத்திய அலுவலர்களின் நாட்குறிப்பு புத்தகத்திற்கு இணங்க | சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 02-20/2014 மற்றும் 2014 பெப்ரவரி 05 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தனர். இக் காலப் பகுதிக்காக குருகிய விடுமுறை, அரை விடுமுறை அல்லது பூரண விடுமுறை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | உறுதி செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வைத்திய அலுவலர்களின் வரவு பதிவு ஆவணமாக வைத்திய அலுவலர்களின் கடமை நாட்புத்தகம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணமொன்றாவதால் அதற்கு இணங்க வைத்திய அலுவலர்களின் குறைந்த பட்ச காலம் காப்புச் செய்யப்படும் வகையில் கடமையில் ஈடுபடுதல், கடமையிற்கு சமுகமளிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள நாட்களில் அதன் பிரகாரம் கடமைக்கு அறிக்கையிட்டுள்ளதாக சுட்டிக் காட்ட முடியும். | |
| (ii) | சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் MA/MS/A/07/2021 மற்றும் 2021 ஒக்டோபர் 11 திகதிய கடிதம் பிரகாரம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 7/2001 (அ) மற்றும் 2001 ஆகஸ்ட் 31 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் கடமைக்கு அறிக்கையிடுவதற்காக விடுமுறை தின சம்பளமாக ஆரம்ப சம்பளத்தின் 1/20 படிகளை பெற்றுக் கொள்ள குறைந்தபட்சம் ஒரு தினத்தில் 06 மனித்தியால தொடர்ச்சியாக கடமையாற்ற வேண்டும். எனினும் மேற் குறிப்பிட்ட சிறைச்சாலை வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டு கடமையாற்றும் 30 வைத்தியர்கள் ஒரு மாத காலத்திற்காக வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களில் கடமைக்கு அறிக்கையிட்ட 87 மனித நாட்களினுல் 540 மனித மனித்தியால காலமொன்று கடமையாற்ற வேண்டிய போதும் 133 மனித மனித்தியாலங்கள் 35 நிமிடங்கள் மாத்திரமே கடமையாற்றி இருந்தனர். | வைத்தியர்களிற்காக கொடுப்பனவு செய்யப்படுவது அவசர அழைப்புக் கடமைக்கான கொடுப்பனவொன்றாவது டன், அது மேலதிக நேர கொடுப்பனவு ஒற்றல்லாததெனவும் அதன் பிரகாரம் ஒவ்வொறு வைத்தியர்களினதும் அவசர அழைப்பு நாட்கள் கடமை தினப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அங்கு குறிப்பிட்டுள்ள நாட்களிற்கு மாத்திரம் குறித்த படிகள் கோரப்பட்டுள்ளது. | சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் MA/MS/A/07/2021 மற்றும் 2021 ஒக்டோபர் 11 திகதிய கடிதம் பிரகாரம் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரின் இலக்கம் 7/2001 (அ) மற்றும் 2001 ஆகஸ்ட் 31 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2014 ஆண்டு முதல் 2022 ஆண்டிறுதி வரையும் ஓட்டத்தில் ஈடுபடுத்தாத 33 வாகனங்கள் | குறித்த நிலைமைகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணம் 128 (1) (ஒ) பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 363,837 செலவொன்றை மேற்கொண்டு 2023 சனவரி 01 திகதி முதல் திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்கு செல்லுவடியாகும் வகையில் காப்புறுதி காப்பு பெறப்பட்டிருந்தது. இந்த வாகனங்களை கணக்காய்வு திகதி வரை ஓட்டத்திற்கு ஈடுபடுத்தி இருக்காததால் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | செலவிடப்படும் பணம் செலவிடுபவர் அரசிற்கு உச்ச பெறுமதி கிடைப்பதாக உறுதி செய்ய இயலுமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தணடப்பணம் செலுத்த முடியாத குற்றவாளிகளை சிறைப் படுத்துவதுடன், அச்சிறைக்கைதிகளின் தண்டப்பணம் செலுத்தி விடுவிக்கும் கட்டளை கிடைத்தவுடனே அவர்களை சிறைத்தண்டனைகளில் இருந்து விடுவிக்க வேண்டும். எனினும் 2022 சனவரி முதல் ஜுன் வரை காலப்பகுதினுள் 03 சிறைச்சாலை நிறுவனங்களில் விடிவிக்கும் கட்டளை கிடைத்த திகதியினுள் சிறை தண்டங்களிலிருந்து விடுவிக்காத 46 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நிர்வாக நடவடிக்கைகளில் கடினம் காரணத்தால் விடுவித்தல் தாமதமாவதுடன் இதற்கு அடுத்து அது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி கட்டளை கிடைத்த திகதியன்றே விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | விடுவிக்கும் கட்டளை கிடைத்தவுடனே குற்றவாளிகளை சிறைத் தண்டனைகளிலிருந்து விடுவிக்க வெண்டும். |
| (ஆ) | பிணை தொகையை செலுத்த முடியாத கைதிகளை சிறைப்படத்துவதுடன், அக் கைதிகளை பிணை தொகை செலுத்தி விடுவிக்கும் கட்டளை கிடைத்தவுடனே அவர்களை கைதிளிலிருந்து விடுவிக்க வேண்டும். எனினும் அங்குனகொலபெலஸ்ஸ மற்றும் மொனராகல சிறைச்சாளைகளில் 2022 சனவரி 01 திகதி முதல் 2022 ஜுன் 30 திகதி வரை காலப்பகுதினுள் பிணை தொகையை செலுத்தி விடுவிக்கும் கட்டளை கிடைத்த திகதினுள் கைதிளிலிருந்து விடுவிக்கப்படாத 291 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நிர்வாக நடவடிக்கைகளில் கடினம் காரனத்தால் விடுவித்தல் தாமதமாவுவதுடன் இதற்கு அடுத்து அது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி கட்டளை கிடைத்த திகதியன்றே விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பிணை தொகையை செலுத்தி விடுவிக்கும் கட்டளை கிடைத்த திகதியன்றே கைதிலிருந்து விடுவிக்க வெண்டும். |
| (இ) | அங்குனகொலபெலஸ்ஸ சிறைசாலையில் தொலைபேசி சமிக்சை இடையூறு ஏற்படுத்தும் தொகுதியின் தொடர்சியான செயற்பாடு சிறைச்சாலை உள்ளக வளவில் அல்லாது அதற்கு அன்மித்த வெளி பிரதேசத்திலும் | அவதானிப்புடன் இணங்குகிறேன். தொலை பேசி சமிக்சை இடையூறு ஏற்படுத்தும் தொகுதி உரிய முறையில் | தொலை பேசி சமிக்சை இடையூறு ஏற்படுத்தும் தொகுதியை தாபித்த நோக்கத்தை அடைந்து கொள்ள உரியவாறு தொலை பேசி சமிக்சை |

| | | |
|---|---|---|
| செயற்படுவதாக கணக்காய்விற்கு வெளிப்படையானது. இந் நிலைமையினுள் சிறைசாலையை அன்மித்த அன்டி வசிக்கும் மக்கள் அதிக சிரமத்திற்குள்ளாகி இருந்ததுடன் இணையத்தை பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அக்குடும்ப குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளிற்கு இது பாரிய தடையாகியுள்ளது. | செயற்படாமை தொடர்பாக இலங்கை கடற்படையை அறிவூட்டி விரைவில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இடையூறு ஏற்படுத்தும் தொகுதியை செயற்படுத்த வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்.

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தில் 2022 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகார அலுவலர் எண்ணிக்கை 7,872 ஆனதுடன், உள்ளவாறான அலுவலர் எண்ணிக்கை 6,268 ஆனதில் 05 பதவிகளிற்குரியதாக 13 மிகை அலுவலர்களும் 71 பதவிகளிற்குரியதாக 1,617 அலுவலர் வெற்றிடங்களும் நிலவின. | வெற்றிட பதவிகளிற்காக ஆட்சேர்பு செய்ய அமைச்சினை அறிவுட்டியுள்ளதுடன், அரச கொள்கையின் மீது அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவது பிரதமரின் செயலாளரின் தலைமையிலான குழு பரிந்துரையின் மீது 22 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப அங்கீகாரம் கிடைத்துள்ளது அதன் பிரகாரம் முன் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று தரத்திலான வைத்தியர்களின் எண்ணிக்கை அங்கீகார அளவை விட 13 ஆ மிகையொன்று நிலவிது. வைத்தியர்கள் இணைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை நிறுவனங்களின் வைத்தியசாலைகளாக கருதும் போது தரத்திலான வைத்திய அலுவலர்கள் மற்றும் பதிவு செய்த வைத்திய அலுவலர்களின் எண்ணிக்கையில் முறையே 22 மற்றும் 05 ஆன மிகையும், சிறைச்சாலை நிறுவனங்கள் 08 இல் தரத்திலான வைத்திய அலுவலர்கள் மற்றும் பதிவு செய்த வைத்திய அலுவலர்களின் | வைத்திய அலுவலர்களையும் சுகாதார அமைச்சினால் இணைப்பு செய்வதுடன், இந்த அலுவலர்களின் தனிப்பட்ட கோவைகள் நாளாது வரையாக்கப்படுவது சுகாதார அமைச்சினாலாகும். | வைத்தியர்கள் அங்கீகார அலுவலர் எண்ணிக்கையை விஞ்சி உள்ளவாறான அலுவலர் எண்ணிக்கையொன்றை பேணிச் செல்லக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையில் முறையே 09 மற்றும் 05 ஆக வெற்றிடங்கள் நிலவின. | | |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 2014 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய தாபன விதிக் கோவை II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் குற்றங்கள் தொடர்பாக 309 ஒழுக்காற்று விசாரணைகளும் அவ் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒழுக்காற்று விசாரணகள் 113 ஆனது. | சிறைக்கைதிகளின் அளவு உயர் பெறுமானத்தை எடுத்துள்ளதால் சிறைக்கைதிகள் தப்பிஓடல், அலுவலர்களுடன் பிரச்சினை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒழுக்காற்று விசாரணை எழுவதால் அதிக ஒழுக்காற்று விசாரணை எண்ணிக்கை காணப்படுகின்றது. 2023 ஆண்டு முதல் முடிவுறுத்தாத ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | தாபன விதிக் கோவை II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் குற்றங்கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல், முடிவுறுத்தல் மற்றும் ஒழுக்காற்று கட்டளை விநியோகித்தல் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும. |
| (ஈ) | பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2018 ஏற்பாடுகள் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் இரண்டு அலுவலர்கள் ஆணையாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் 2023 சனவரி 02 முதல் 2023 திசெம்பர் 30 வரையும் அல்லது குறித்த வெற்றிடங்கள் நிரப்பும் வரை ஆகிய இரண்டு திகதிகளில் முன்னர் வரும் திகதி வரை மீண்டும் கடமையில் ஈடுபடுத்த அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஒக்டோபர் 10 திகதிய இலக்கம் 3/2019 அரச சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் v பந்தி பிரகாரம் மற்றும் 2018 பெப்ரவரி 27 திகதிய இலக்கம்/18/ஏனைய(008) அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் பதவியுயர்வை எதிர்பார்த்துள்ள அலுவலர்களின் மூலம் குறித்த வெற்றிடங்களை, பதிற் கடமை, கடமை நிறைவேற்றுதல் அல்லது கடமை மேவுகையின் மீது நிவர்த்திக்க இயலுமாக இருக்கையில் எந்தவொறு ஓய்வுபெற்ற அலுவலரையும் மீண்டும சேவையில் ஈடுபடுத்தக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2023 பெப்ரவரி 22 திகதியளவில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் | அச் சந்தர்ப்பத்தில் விஷேட தர சிறைச்சாலை அதிகாரி பதவிக்கு தகுதிவாய்ந்த அலுவலர்கள் இல்லாததால், ஒப்பந்த அடிப்படையில் இரண்டு அலுவலர்களை ஆட்சேர்த்துள்ளதுடன், தற்போது விஷேட தர சிறைச்சாலை அதிகாரி பதவிக்கு பதவியுயர்வு செய்ய அங்கீகாரத்திற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2019 ஒக்டோபர் 10 திகதிய இலக்கம் 3/2019 அரச சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் v பந்தி பிரகாரம் மற்றும் 2018 பெப்ரவரி 27 திகதிய இலக்கம்/18/ஏனைய(008) அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஷேட தரத்தின் அதிகாரி பதவிக்கு தகைமையுடைய ஏழு அலுவலர்கள் இருக்கும் போது அவ் அலுவலர்களிற்கு மத்தியில் இரண்டு அலுவலர்களை மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு பதிற்கடமை, கடமை நிறைவேற்றல் அல்லது கடமை மேவுகையின் மீது நியமிக்க இயலுமாக இருக்கையில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | அரச சேவைகள் ஆணைக்குழு செயலாற்றுகை ஒழுங்கு விதி இலக்கம் 203 பிரகாரம் அரச அலுவலர் ஒருவர் ஒரே சேவை நிலையத்தில் நீண்ட காலமாக தொடர்ந்து சேவையாற்றுவதன் மூலம் அல்லது ஒரே கடமையை நீண்ட காலமாக தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் ஏற்பட முடியுமான முறைகேடுகளை நடத்தைகளை தவிர்க்க வருடாந்த இடமாற்ற கொள்கை மற்றும் ஒழுங்குகளை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டும். எனினும் மஹர சிறைச்சாலையில் மற்றும் அநுராதபுர சிறைச்சாலையில் முறையே 96 மற்றும் 20 அலுவலர்கள் சிறைச்சாலைக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் 06 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் வரையான காலமாக அச் சிறைச்சாலையிளேயே தொடர்ந்து சேவையாற்றுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இங்கு 09 அலுவலர்கள் இதற்கு முன்னரும் மஹர சிறைச்சாலைக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றியுள்ளனர் என கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். 05 ஆண்டுகள் கடமையாற்றியுள்ள அலுவலர்களுக்கு இடமாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச சேவைகள் ஆணைக்குழு செயலாற்றுகை ஒழுங்கு விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |